**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை ஆண்டு III – 2020/2021 (நிகழ்நிலை)**

# சர்வதேச மனிதாபிமானச் சட்டம்

(மூன்று மணித்தியலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

எவையேனும் **<u>மூன்று</u>** வினாக்களுக்கு **<u>மாத்திரம்</u>** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

**1.** சர்வதேசச் செஞ்சிலுவை இயக்கத்தின் ஆரம்பகட்ட பணிப்பாணையானது பெரிதும் வளர்ச்சி யடைந்துள்ளதுடன், ஏனைய நிவாரண நடவடிக்கைகளுக்கும் விரிவடைந்துள்ளதாயினும், அவற்றினது மையமாக மருத்துவ உதவிகள் அமைந்துள்ளன. மனிதாபிமானச் செயற்பாடுகளில் அதன் பரந்த அனுபவம் காரணமாக, கோவிட் 19 பெருந்தொற்று நோய்க் காலப்பகுதியில் ஆதரவு மற்றும் ஆலோசனை வழங்குமாறு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கமானது வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் வரலாற்று வளர்ச்சி மற்றும் மனிதாபிமானச் செயற்பாட்டாளர்களின் முன்முயற்சிகள் எவ்வாறு உதவியளித்துள்ளன என்பதனையும், நெருக்கடியான காலங்களில் மக்களுக்கு அவசியமான உதவிகளைத் தொடர்ந்து எவ்வாறு வழங்கலாம் என்பதனையும் மேலுள்ள கூற்றின் பின்னணியில் ஆராய்க.

(100 புள்ளிகள்)

**2.** **(அ)** மற்றும் **(ஆ)** ஆகிய **<u>இரண்டு</u>** பகுதிக்கும் விடை தருக.

டோரா அரசும் கோலா அரசும் ஆயுதமோதலொன்றில் ஈடுபட்டுவருகின்றன. டோராவினது ஆயுதந்தாங்கிய படையினர் 2021ஆம் ஆண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் கோலா அரசினது தலைநகரைக் கைப்பற்றினர். அதனைத்தொடர்ந்து, பெண்கள் அனைவரும் வேலைக்குச் செல்வதனையும் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதனையும் தடைசெய்து, பெண் பாடசாலைகள் அனைத்தையும் மூடிவிடுமாறும் உத்தரவிட்டனர். மேலும், பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பெண் மாணவர்களுக்கான செயற்பாடுகளை கொண்டு நடாத்திவருகின்ற கலாசார நிலையங்களுக்கு டோரா நாட்டுப் படைகள் தீ வைத்து எரித்தும்வருகின்றன. கோலா நாட்டு மக்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைய முயற்சி செய்தனர். ஆனால், பாதைகளில் தடுப்பை ஏற்படுத்துவதுடன், நாட்டிலிருந்து தப்பிக்க முயற்சிக்கின்ற கோலா நாட்டு மக்கள் மீது டோரியன் நாட்டுப் படைகள் சுடத்தொடங்கியது. டோரியன்

நாட்டு இராணுவத்தினர் சிறுமிகள் மற்றும் பெண்களைக் கடத்தி பாலியல் பலாத்காரம் செய்வதாகத் தெரிவிக்கும் செய்தி சர்வதேச ஊடகங்களில் வெளியானது. டோரிய நாட்டு படைகளும் பெண்களை அவர்களது முகாம்களில் வலுக்கட்டாயமாகத் தடுத்துவைத்திருப் பதாகவும், அவர்கள் இப்போது இராணுவ வீரர்களின் மணப்பெண்கள் என்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் காரியாலயத்தின் சட்ட ஆலோசகர் நீர் என்று கருதிக்கொள்க. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி, மேற்கூறிய சூழ்நிலையில் ஒரு பகுப்பாய்வு அறிக்கையை எழுதுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்.

அறிக்கையினை எழுதுக. (75 புள்ளிகள்)

(ஆ) டோரியன் மற்றும் கோலியன் ஆகிய இரண்டும் ஒரே நாட்டிற்குள் காணப்படுகின்ற இரண்டு ஆயுதக்குழுக்களாக இருப்பின் உமது அறிக்கையானது வேறுபடுமா?

(25 புள்ளிகள்)

**3.** சனா மற்றும் ரோமா ஆகிய இரண்டு அரசுகளும் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக ஒரு பிராந்திய எல்லையில் ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ளன. சனா அரசின் ஆயுதப்படைகள் கடந்த ஆண்டு, எல்லைப்புறத்திலுள்ள ரோமா அரசின் இராணுவ முகாமைக் கைப்பற்றுவதற்கு முடிந்ததுடன், அவர்கள் ரோமா இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 100 வீரர்களையும், அருகிலுள்ள நகரத்தைச் சேர்ந்த சுமார் 25 இளைஞர்களையும் அவர்கள் அந்தப் பகுதியில் பயணித்ததாகவும் துப்பாக்கி ஏந்தியதாகவும் தெரிவித்து கைது செய்தனர். சனா நாட்டுப் படைகள் தங்களுடைய எல்லையில் இரகசிய நிலையமொன்றை அமைத்திருப்பதாகவும், சிறை பிடிக்கப்பட்டவர்கள் மோசமாக நடத்தப்பட்டதாகவும் ஒரு சுயாதீன சர்வதேச அறிக்கை கண்டறிந்துள்ளது. ரோமா வீரர்கள் சானா நீதிமன்றங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், ரோமா ஆயுதப்படையில் உறுப்பினர்களாக இருந்ததற்காக அவர்களுக்கு உடல் ரீதியான தண்டனை வழங்கப்பட்டது. சிறை பிடிக்கப்பட்டவர்களுக்கு போதிய உணவு மற்றும் சுகாதார வசிதிகள் வழங்கப்படவில்லை என்பதுடன், சனா அரசாங்கத்தால் இயக்கப்படும் சுரங்கங்களில் வேலை செய்ய அவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட தங்களது குடிமக்களை உடனடியாகத் திருப்பியனுப்பி வைக்குமாறு ரோமா அரசாங்கம் கோருகின்றது.

சர்வதேச மனிதாபிமான அமைப்பொன்றினது பிரதிநிதியென உம்மைக் கருதிக்கொள்க. பொருத்தமான சர்வதேசச் சட்டம் மற்றும் சட்டக் கோடபாடுகளைக் குறிப்பிடுவதன் மூலம் இச்சூழ்நிலை தொடர்பான அறிக்கையொன்றை எழுதுக.

(100 புள்ளிகள்)

**4.** ஒன்றில் **(அ) வுக்கு** அல்லது **(ஆ) வுக்கு மாத்திரம்** விடை தருக.

(அ) அண்மையில் நிகழ்நிலைக் கருத்தரங்கொன்றைக் கேட்ட சட்டப்பட்டதாரியொருவர் நீரெனக் கருதிக்கொள்க. அங்கு விசேட பேச்சாளரொருவர் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் இயற்கைச் சுற்றாடலுக்குச் சட்டப்பாதுகாப்பு இல்லை என்று கூறினார். எந்தவொரு ஆயுதமோதல் சூழ்நிலையின் போதும் ஏற்பட்ட சுற்றாடல் அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் அல்லது வழிமுறைகளைப் பயன்படுத்தியமைக்காக எந்தவொரு நபருக்கும் வழக்குத்தொடர முடியாதென்றும் அந்தப் பேச்சாளர் கூறினார். இளம் வழக்கறிஞர் இதழுக்கு இந்த விடயந்தொடர்பானதொரு விளக்கத்துடன் கட்டுரை யொன்றைச் சமர்ப்பிக்க நீர் முடிவு செய்கின்றீர்கள்.

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பொருத்தமான கோட்பாடுகளுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி கட்டுரையினை எழுதுக. உமது கட்டுரையில் ஆயுதமோதல் சூழ்நிலைகளின் எடுத்துக்காட்டுக்கள் மற்றும் தொடர்புடைய சட்ட விதிகள் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(100 புள்ளிகள்)

(ஆ) தியாரா மற்றும் சித்தாரா ஆகிய அரசுகள் ஒன்றுடனொன்று சண்டையிலீடுபட்டு வருகின்றனர். சித்தாராவினது படையின் ஆயுதக் களஞ்சியமாக அடையாளங் காணப்பட்ட இலக்கொன்றின் மீது தாக்குதல் நடத்துமாறு தியாரா இராணுவத்தின் கட்டளையதிகாரி கட்டளையிடுகின்றார். இத்தாக்குதலை நடாத்திய தியாரா நாட்டு வான்படை அதிகாரிக்கு தாக்குதல் நடத்திய நாளன்று குறித்த இலக்கை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியவில்லையாயினும், முன்னராகப் பெற்றுக்கொண்டிருந்த உளவுத்துறை அறிக்கையின் அடிப்படையில் அவர் ஏவுகணைகளை ஏவினார். தாக்கப்பட்ட இலக்கு ஆயுதக்கிடங்கல்ல, சித்தாராவிலுள்ள பழங்கால நூலகம் மற்றும் தாவரவியல் பூங்கா வளாகம் என்பது பின்னர் தெரியவந்தது. சுமார் 250 பேர் கொல்லப்பட்டதுடன், வளாகத்தினுள் பணியாளர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் உட்பட வளாகத்தில் 50 இறந்த உடல்களும் கண்டெடுக்கப்பட்டன.

உமது கருத்தின்படி, மேற்கூறிய சம்பவத்திற்கு தியாரா மற்றும் அந்நாட்டு அதிகாரிகளின் சர்வதேசச் சட்டப்பொறுப்பு என்னவாக இருக்கும்? பொருத்தமான சர்வதேசச் சட்ட விதிகள், கோட்பாடுகள் மற்றும் வழக்குச் சட்டத்தால் உமது விடையானது ஆதாரப்படுத்தப் படுத்தப்படுதல் வேண்டும்.

(100 புள்ளிகள்)

5. **(அ)** மற்றும் **(ஆ)** ஆகிய **<u>இரண்டுக்கும்</u>** விடை தருக.

(அ) காப்ரா என்ற நாட்டில் குழுக்கள் பலவற்றுக்கிடையே தற்பொழுது சண்டை நடந்து வருவதுடன், மிக அண்மையில் நடைபெற்ற பாதுகாப்புப் பேரவையின் கூட்டத்தில், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் கடுமையான போர்க்குற்றங்கள் நடந்ததாக பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. ''தேசபக்தர்களின் கூட்டணி'' என்ற பெயருடைய ஆயுதக்குழுவும், காப்ராவினது ஆயுதப்படைகளும் சண்டையிலீடுபட்டுள்ள இரண்டு முக்கிய குழுக்களாகும். எனினும், பிளக்ஸ்ட்ரீம் என்ற குழுவுக்கு நிதியளித்ததுடன், கப்ரான் ஆயுதப்படைகளுக்கு பயிற்சியளித்ததுடன், சண்டைகளிலும் பங்கேற்றுள்ளதான ஷியான் என்ற அரசானது, கிட்டத்தட்ட உறுதிசெய்யப்பட்ட அரைவாசி மீறல் சம்பவங்களுக்குப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேலுள்ள சூழ்நிலையில் தரப்புக்களின் சர்வதேசச் சட்டக் கடப்பாடுகளின் அமுலாக்கல் தொடர்பாக ஆராய்க. (50 புள்ளிகள்)

(ஆ) ஜியா என்ற அரசானது 15 ஆண்டுகளாக ஆயுதமோதலொன்றில் ஈடுபட்டு வருவதுடன், ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்காக தங்கள் ஆயுதப் படைகளுக்கு மீண்டும் பயிற்சியளித்து வருகின்றனர். ஜியா பல்கலைக்கழகத்தின் சட்ட பீடமானது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை அதன் பாடத்திட்டத்திலிருந்து நீக்கிவிடுவதற்கு முடிவுசெய்துள்ளது. ஜியா பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கத்தின் தலைவர் நீர் என்று கருதிக்கொள்க. மாணவர் சங்கத்திலுள்ள உங்கள் சகாக்கள் பாடத்திட்டத்திலிருந்து பாடத்தை நீக்குவதற்கு எதிராக வாதிடுவதற்கு பீடச் சபைக்கு ஒரு கடிதத்தை எழுதும்படி கேட்கிறார்கள்.

ஜியா அரசினுடைய சர்வதேசச் சட்டக் கடப்பாடுகளுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி உமது வாதங்களை ஆதாரப்படுத்தி உமது கடிதத்தை எழுதுக.

(50 புள்ளிகள்)

6. ''பேரழிவு ஆயுதங்கள் என்பது இரசாயன, உயிரியல் அல்லது அணு ஆயுதங்களானாலும், பௌதீகப் பொருட்கள் தொடர்பாக நாம் ஒருமுறை மட்டுமே நினைத்திருந்தோம். இருப்பினும், இன்றைய உலகில், சரியான இலக்குகளை குறிவைத்துக் கொண்டால், கணிணிக் குறியீட்டின் சில வரிகளால் பேரழிவு சேதத்தை ஏற்படுத்துவது சாத்தியமாகும். இத்தகைய சூழ்நிலைகளில், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறும் முடிவுகளை இலக்கு வைப்பதற்கான குற்றவியல் பொறுப்பை அடையாளம் காண்பது மிகவும் கடினமாகிவிடும்.''

நீர் உடன்படுகின்றீரா? போரியல் வழிவகைகளினதும் வழிமுறைகளினதும் தற்போதைய சர்வதேசச் சட்ட கட்டமைப்பினை மேலுள்ள கூற்றின் பின்னணியில் நுணுக்கமாக மதிப்பீடு செய்க. (100 புள்ளிகள்)

* *******************